**25 பாலங்களின் புனர்நிர்மாணத்திற்கான செயற்திட்டம் - 2014**

25 பாலங்களின் புனர்நிர்மாணத்திற்கான செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட 2014 சனவரி 30 ஆம் திகதிய 886 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 1 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. 07 மாகாணங்களில் நடைபாதைகளைக் கொண்ட 25 இருவழிப் பாலங்களை புனரமைத்தலே செயற்திட்டத்தின் நோக்கமாகும். பிரயாணிகள் மற்றும் பண்டங்கள் போக்குவரத்தின் அதிகரிக்கும் கேள்வியினை எதிர்கொள்ளல், குறித்த பிரதேசங்களில் வாகனப்பாவனை, வீதி பராமரிப்பு செலவினம், பிரயாண நேரம் மற்றும் வீதி விபத்துக்களை குறைப்பதன் மூலம் குறித்த பிரதேசங்களின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களித்தல் போன்றன செயற்திட்டத்தால் எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,632 மில்லியன்களுக்கு சமனான 10 மில்லியன் குவைத் தினார்கள் ஆகும். அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியம் மொத்தக் கிரயத்தினையும் நிதியளிக்க உடன்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 சனவரி 30 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள

தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்பதும், மற்றும்

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றானது செயற்பாட்டு, முதலீட்டு மற்றும் நிதிசார் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்களை முறையாக வகைப்படுத்தி காட்டும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரூபா 336,416 தொகையான செலுத்தப்பட்ட சம்பளங்கள் சம்பளக் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு பதிலாக கட்டுநிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) வேறு செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 791,922 பெறுமதியான நேரில் மேந்தலைச் செலவுகள் இந்த செயற்திட்டத்திற்கு சாட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2014 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப் பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டினுள் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
| | குவைத் தினார் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| கேஎவ்ஏஈடி | 10 | 4.632 | - | - | - |
| இலங்கை அரசாங்கம் | - | - | 4 | 4.858 | 7.796 |
| **மொத்தம்** | **10** | **4.632** | **4** | **4.858** | **7.796** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தால் மூன்று பிரதேச செயலகங்களிடமிருந்து 65 காணித்துண்டுகளை சுவீகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறெனினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதுவித காணித்துண்டினையும் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தால் ஒப்பந்ததாரர் மற்றும் ஆலோசகரைத் தெரிவு செய்தல் போன்ற பிரதான நடவடிக்கைகளுக்காக ஒட்டுமொத்தக் கொள்வனவு திட்டம்

தயாரிக்கப்பட்டிருந்ததெனினும், உள்ளபடியான செயலாற்றலானது திட்டத்திலிருந்து மிகவும் பின்தங்கியிருந்தது. பொதி – 01 இன் கீழான ஒப்பந்தமானது 2014 செப்தம்பர் 23 ஆந் திகதி கையளிப்பதற்கு பட்டியல்படுத்தப்பட்டு 184 நாட்கள் காலதாமதத்துடன் 2015 மார்ச் 26 ஆந் திகதியே கையளிக்கப்பட்டது. மதியுரை ஒப்பந்தமும் 369 நாட்கள் காலதாமதத்துடன் கையளிக்கப்பட்டிருந்ததுடன், மதியுரை சேவைகள் உடன்படிக்கையானது 2020 ஆகஸ்ட் 04 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 ஏப்ரல் 29 ஆந் திகதி தொடக்கம் கடன் நிதி ஏற்பாடுகள் செயற்பாட்டில் இருந்ததெனினும், 2015 யூலை 20 வரையிலும் கடன் பெறுகைகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, எஞ்சிய செயற்திட்டக்காலத்தினுள் இம் மொத்த கடன் பெறுகைகளை பயன்படுத்தும் சாத்தியம் சந்தேகத்திடமாகவிருந்தது.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் 2012 சனவரி 01 ஆந் திகதி மூலப் பிரேரணையில் உள்ளடக்கப்பட்டிருந்த 08 பாலங்களின் இட அமைவானது அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், 2014 சனவரி 30 ஆந் திகதி கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மூலப் பிரேரணையில் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தங்கள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.